செ.வெ.எண்:16/ஜனவரி நாள்:10.01.2016.

# இராமநாதபுரம் மாவட்டம்

## 27-ஆவது சாலைப் பாதுகாப்பு வாரவிழாவினை முன்னிட்டு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சி அரங்கினை திறந்து வைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை

## மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகம் அருகில் இன்று (10.01.2016) 27-ஆவது சாலைப் பாதுகாப்பு வாரவிழாவினை முன்னிட்டு போக்குவரத்துத்துறை மற்றும் காவல்துறையின் சார்பாக மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார். அதன்பின்பு, போக்குவரத்துத்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள் பங்கேற்ற சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியினைத் துவக்கி வைத்து கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

**இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பேசியதாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொதுமக்கள் பாதுகாப்பினை மேம்படுத்தி, அவர்தம் வாழக்கையில் ஏற்றம் பெரும் விதமாக எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறாகள். அந்தவகையில், சாலைப் பயணங்களின் போது பாதுகாப்பான முறையில் பயணித்திட வேண்டுமென்ற எண்ணத்தை வலியுறுத்தும் விதமாக 10.01.2016 முதல் 16.01.2016 வரையிலான 7 நாட்களை சாலைப்பாதுகாப்பு வாரவிழாவாக கடைபிடிக்க உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்படி, பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட 2015-2016ஆம் நிதியாண்டில் சாலைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர, சாலை விபத்து மற்றும் அவசர சூழ்நிலையில் மனித உயிர்களை காப்பாற்றும் பொருட்டு, மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் 50.கி.மீ இடைவெளியில் அவசர விபத்து சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சாலை விபத்துகளில் சிக்கும் வாகனங்களை, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் அப்புறப்படுத்த 24 மணிநேரமும் நெடுஞ்சாலை ரோந்துப்பணி காவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பொதுமக்கள் சாலையில் பயணிக்கும் வேகத்தோடு பயணிக்காமல் சாலை விதிகளைப் பின்பற்றி தங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். இருசக்கர வாகனத்தில் பயணம் மேற்கொள்ளும்பொழுது அலைபேசி பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். தலைக்கவசம் (ஹெல்மட்) அணிந்து பயணம் மேற்கொள்வதை அனைவரும் பின்பற்றவேண்டும். இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மற்றவர்களும் விழிப்புணர்வு அடைய கற்றுத்தர வேண்டும். பொதுமக்களின் விழிப்புணர்வு மற்றும் கவனத்தின் மூலமாக மட்டுமே சாலை விபத்துகளை முற்றிலுமாக தவிர்த்திட முடியும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.முருகன், உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.ஜே.சேக்முகமது, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.ஜெயஜோதி, ராம்கோ தலைவர் திரு.செ.முருகேசன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திரு.ஜி.முனியசாமி, உட்பட மோட்டார் வாகன ஆய்வாளர்கள், உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**